

சென்னை கிழக்கு மாவட்டம் எழும்பூர் தெற்கு பகுதி சார்பில் மனிதநேயம் – 17 கழகத் தலைவர் அரசியல் திலகம்! கலையும் அன்பும் கலந்த இதயம்! என்ற தலைப்பில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் தலைமை செயற்குழு உறுப்பினர் கே.எஸ்.எம்.நாதன் தலைமையில் நடைபெற்ற மாபெரும் கருத்தரங்கில் திரைக்கலைஞர் இளையதிலகம் பிரபு திரைக்கலைஞரும், கழக கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை துணைத் தலைவருமான போஸ்.வெங்கட், மக்கள் நீதி மய்யத்தின் இளைஞரணி செயலாளர் கவிஞர் சினேகன் ஆகியோர் உரையாற்றினர், இக்கருத்தரங்கில் மேயர் பிரியா ராஜன், வி.சுதாகர், சொ.வேலு, கோ.ஏகப்பன், கே.எஸ்.ரவிச்சந்திரன், தமிழன் பிரசன்னா, பரிதிஇளம் சுருதி, எம் சி,வே.உமாகாந்தன், புனிதவதி எத்திராசன் எம் சி, ராஜேஸ்வரி ஸ்ரீதர் எம் சி ,சுதா தீனதயாளன் எம் சி, வி.விஜயகுமார், ஆர் பாபு மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் செயல் வீரர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.




தருமபுரி மேற்கு மாவட்டம் சார்பில் ”தமிழ்நாடு தலைகுனியாது பிரம்மாண்ட பொதுக்கூட்டம் ராஜாபேட்டை பகுதியில் நடைபெற்றது. பொதுகூட்டத்திற்கு மாவட்ட செயலாளர் பி.பழனியப்பன் தலைமை தாங்கினார். தி.மு.க. கொள்கை பரப்பு செயலாளர் சி.வி.எம்.பி. எழிலரசன் எம்.எல்.ஏ., எழுச்சியுரை ஆற்றினார். கூட்டத்தில் மாவட்ட அவைத்தலைவர் கே.மனோகரன், ஒன்றிய செயலாளர்கள் கே.பி. சக்திவேல், பி.எஸ்.சரவணன், பிரபு ராஜசேகரன், முத்துக்குமார், மாது மற்றும் முருகன், கு.கௌதமன், பி.கே.முரளி, இளைஞர் அணி சிவகுரு, வழக்கறிஞர் சந்திரசேகர் உள்ளிட்ட பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### தேசிய விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற

# 35 விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு ரூ.28.93 இலட்சம் நிதி - உபகரணங்கள்!

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, பிப்.27-

முதலமைச்சர் அவர்கள் இந்தியாவின் விளையாட்டு தலைநகராக தமிழ்நாட்டினை உருவாக்கும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார். அதனடிப்படையில் விளையாட்டு வீரர்களுக்கு உதவுவதற்காக தமிழ்நாடு சாம்பியன் அறக்கட்டளையை தொடங்கி, அந்த நிதியில் இருந்து விளையாட்டு உபகரணங்கள் வாங்க நிதியுதவி வழங்குவதுடன், வெளிநாடுகளில் நடைபெறும் போட்டிகளில் பங்கேற்க ஆகின்ற விமான போக்குவரத்து மற்றும் தங்குவதற்கான செலவுகளுக்காகவும், விளையாட்டு வீரர்கள் சர்வதேச, தேசிய அளவிலான போட்டிகளில் பங்குபெறும் வகையில் சிறப்பு பயிற்சிகள் மேற்கொள்ளவும் நிதியுதவி வழங்கப்பட்டு வருகின்றது.

அதனடிப்படையில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தேசிய அளவில் நடைபெற்ற டேக்வாண்டோ, தடகளம், நீச்சல் மற்றும் கால்பந்து போட்டிகளில் பதக்கங்கள் வென்ற நரம்பியல்சார் மாற்றுத்திறனாளிகளான 29 வீரர், வீராங்கனைகளுக்கு நேற்று (26.2.2026) தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியிலிருந்து மொத்தம் 24.00 லட்சம் ரூபாய்க்கான காசோலைகளை வழங்கினார்.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சென்னை நேரு விளையாட்டரங்கத்தில் செயல்பட்டு வரும் சிறப்பு நிலை விளையாட்டு விடுதியைச் (Sports Hostel of Excellence) சேர்ந்த ஜூடோ வீரர்கள் அ.ஆகாஷ் ராஜ் மற்றும் அ.ஈஸ்வர் மூர்த்தி ஆகியோருக்கு தலா 45 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான உபகரணங்கள், சர்வதேச பாரா கிரிக்கெட் வீரர் ஆ.சண்முகத்திற்கு 1.28 லட்சம் ரூபாய் மதிப்பிலான உபகரணங்கள், வாள்வீச்சு வீராங்கனை த.தர்ஷினி மற்றும் நீச்சல் வீராங்கனை ந.ஹர்ஷா ஆகியோருக்கு உபகரணங்கள் வாங்குவதற்காக தலா 1 லட்சம் ரூபாய்க்கான காசோலைகளையும், தேசிய அளவிலான சிலம்பம் விளையாட்டு போட்டியில் தங்கப்பதக்கம் வென்ற வீரர் மீ.ஹரிஹரனிற்கு மலேசியாவில் நடைபெறும் சர்வதேச சிலம்பம் போட்டியில் பங்கேற்பதற்காக செலவீன தொகையாக 75 ஆயிரம் ரூபாய்க்கான காசோலையும் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை முதன்மை செயலாளர் சத்யபிரத சாகு, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, பெருமூளை முடக்குவாத மாற்றுத்திறனாளி விளையாட்டு சங்கத்தின் தலைவர் திருமதி செ.உமாராணி உள்பட அரசு அலுவலர்கள், விளையாட்டு வீரர், வீராங்கனைகள் கலந்து கொண்டனர்.

### டான்பாஸ்கோ பாலிடெக்னிக் கல்லூரியில் பயிலும்

# 75 மாணவ, மாணவியருக்கு மடிக்கணினிகள்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழங்கினார்!

*சென்னை,பிப்.27-*

*இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு, நேற்று (26.02.2026) இராயபுரம் மண்டலம், பேசின் பிரிட்ஜ், டான் பாஸ்கோ பாலிடெக்னிக் கல்லூரியில் பயிலும் 75 மாணவ மாணவியர்களுக்கு மடிக்கணினிகளை வழங்கினார்.*

*தமிழ்நாடு முதலமைச்சர் 05.01.2026 அன்று சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மைய வளாகத்தில் உயர்கல்வித் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், கல்லூரி மாணவர்களின் திறன் வளர்ச்சி மற்றும் டிஜிட்டல் முன்னேற்ற த்திற்காக “உலகம் உங்கள் கையில்” என்னும் மாபெரும் திட்டத்தில் 20 இலட்சம் மடிக்கணினிகள் வழங்கும் திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக 10 இலட்சம் மடிக்கணினிகளை கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு வழங்கி தொடங்கி வைத்தார்.*



*அவ்வாறாக, தமிழகம் முழுவதும் உயர்கல்வி பயிலும் கலை, அறிவியல், வேளாண்மை மற்றும் மருத்துவம், பொறியியல், தொழில்நுட்பக் கல்லூரி மாணவ, மாணவியருக்கு தகவல் தொழில்நுட்பம் மற்றும் செயற்கை நுண்ணறிவுத் துறையில் உள்ள வாய்ப்புகளை தெரிந்து கொண்டு பயன்படுத்துவதற்கு ஏதுவாக மடிக்கணினிகள் வழங்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் இன்று, பேசின் பிரிட்ஜ், டான் பாஸ்கோ பாலிடெக்னிக் கல்லூரியில் மூன்றாம் ஆண்டு பயிலும் 75 மாணவ மாணவியருக்கு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் மடிக்கணினிகளை வழங்கினார்.*

*இந்நிகழ்ச்சியில், மேயர் திருமதி ஆர். பிரியா, திரு. வி.க.நகர் சட்டமன்ற உறுப்பினர் திரு.தாயகம் கவி, மத்திய வட்டார துணை ஆணையாளர் எச்.ஆர்.கௌஷிக், மாமன்ற உறுப்பினர் திருமதி புனிதவதி எத்திராஜன், மண்டல அலுவலர் திரு.ஜி.சொக்கலிங்கம், உள்ளாட்சிப் பிரதிநிதி திரு.தமிழ் வேந்தன், டான் பாஸ்கோ பாலிடெக்னிக் கல்லூரி செயலாளர் Fr. செபாஸ்டியன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.*

